
வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



மின்தூக்கிக்காக
கத்தியைக்காட்டி
மிரட்டினான்
தள்ளிவிட்டு

துரத்தினார்
கைத்தொலைபேசி
தகவல் தெரிவித்தார்
மாடிப் படிகளில்

PRIMARY SCHOOL

# SEMESTRAL ASSESSMENT - 1 2014

# TAMIL LANGUAGE - PAPER 2

# PRIMARY 6

NAME: ______________________________

CLASS: __________

DATE: ____________

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
ANSWER ALL QUESTIONS.

| | |
|---|---|
| | 90 |

PARENT'S SIGNATURE : ____________________

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

ஒருநாள் இரண்டு தவளைகள், பால் குடம் ஒன்றில் தவறி விழுந்து விட்டன. இரண்டும், குடத்தினுள் சுற்றிச் சுற்றி வந்தன. அவை அந்த (Q1)_____ வெளியேற முயற்சி செய்தன. ஆனால், (Q2)_____ வைத்து உந்த, பலமான ஆதாரம் எதுவும் இல்லாததால் தவளைகளால் தப்ப முடியவில்லை. சிறிது நேரம் கழித்து ஒரு தவளை, "நான் முற்றிலும் களைத்துப்போய் விட்டேன். இனி (Q3)_____ நீந்த முடியாது," என்றது. பாவம்! அது தன் முயற்சியைக் கைவிட்டுவிட்டு குடத்தின் (Q4)_____ மூழ்கி இறந்து விட்டது.

மற்றொரு தவளையோ, "நான் நீந்துவதை நிறுத்தமாட்டேன், அதிசயமாக ஏதாவது நடந்து நான் இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றப்படுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது," என்று கூறி தன் கால்களை அடித்து, நீந்திக் கொண்டே இருந்தது. சிறிது (Q5)_____ பிறகு, அதன் கால்களின் அசைவுகளினால் பால் கடைந்தெடுக்கப்பட்டு, கெட்டியான வெண்ணெய் திரளத் தொடங்கியது. அத்தவளை, திரண்ட (Q6)_____ மீது கால் வைத்து, குடத்திற்கு வெளியே எம்பிக் குதித்து உயிர் தப்பியது. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது உண்மைதானே!

Q1 (1) குடத்தின்
(2) குடத்தில்
(3) குடத்திலிருந்து
(4) குடத்ினது

Q2 (1) கால்களுடன்
(2) கால்களை
(3) கால்களோடு
(4) கால்களின்

Q3 (1) என்னுடன்
(2) எனக்கு
(3) என்னை
(4) என்னால்

Q4 (1) அடிக்கு
(2) அடியில்
(3) அடியின்
(4) அடியால்

Q5 (1) நேரத்திற்கு
(2) நேரத்தில்
(3) நேரத்தோடு
(4) நேரத்தின்

Q6 (1) வெண்ணெயில்
(2) வெண்ணெயால்
(3) வெண்ணெயின்
(4) வெண்ணெயை

## A2 செய்யுள் / பழமொழி

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

Q7 எண்ணித் துணிக கருமம் _______
எண்ணுவம் என்பது இழுக்கு.

(1) எழுந்தபின்
(2) வந்தபின்
(3) கண்டபின்
(4) துணிந்தபின்

Q8 இயற்றலும் _________ காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(1) ஈதலும்
(2) ஈட்டலும்
(3) ஈன்றலும்
(4) ஈடுபடுதலும்

Q9 பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் _______
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

(1) நூலோர்
(2) பெரியோர்
(3) சான்றோர்
(4) ஈன்றோர்

Q10 ______________ நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளல்.

(1) சிறப்பு
(2) பண்பு
(3) குணம்
(4) மனம்

Q11 ஒரு கை தட்டினால் ___________ எழும்புமா?

(1) இசை
(2) வசை
(3) நகை
(4) ஓசை

Q12 கெடுவான் கேடு ___________.

(1) அளிப்பான்
(2) நினைப்பான்
(3) செய்வான்
(4) விதைப்பான்

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

ஒரு செல்வச் **சீமாட்டி**, ஒருமுறை புகழ் பெற்ற ஒரு சித்திரக் கலைஞனிடம் சென்று, தன்னை ஓவியமாக வரைந்து தருமாறு கேட்டாள். அக்கலைஞன், அந்த ஓவியத்தைத் தீட்ட பல நாள்கள் உழைத்தான். ஓவியம் தயாரானதும், சீமாட்டியைத் தன் கலைக் கூடத்திற்கு அழைத்தான்.

சீமாட்டி, கலைக் கூடத்திற்கு வந்தாள். அவளுடன், அவள் செல்லமாக வளர்க்கும் நாயையும் அழைத்து வந்திருந்தாள். அவள் அந்நாயின் மீது மிகவும் அன்பு வைத்திருந்தாள். "உலகத்திலேயே மிகுந்த புத்தியுள்ள சிறிய பிராணி இது," என்று அவள் நம்பினாள்.

அந்தச் சீமாட்டி, தன் ஓவியத்தை நாயிடம் காண்பித்தாள். "பாரடா! செல்லக் குட்டியே! இது உன் எஜமானியம்மாள்," என்று கூறினாள். ஆனால், நாய் ஓவியத்தின் மீது அக்கறை காட்டவில்லை. அச்செல்வச் சீமாட்டி ஓவியக் கலைஞனிடம், "இந்த ஓவியம், எனக்கு வேண்டாம். இது என்னைப் போல் **தத்ரூபமாக** இல்லை. புத்திசாலியான என் நாய் கூட இந்த ஓவியத்தைப் பார்த்து என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லையே!" என்றாள்.

அந்தக் கலைஞன், உலகியல் அறிவு பெற்றவன். பணக்காரர்களின் மனப்போக்கை நன்கு அறிந்தவன். ஆகவே, அவன் வாக்குவாதம் செய்யாமல், "சீமாட்டியே! தயவு செய்து நாளை வாருங்கள். இந்த ஓவியத்தை மிகவும் தத்ரூபமாக வரைந்து தருகிறேன். தங்கள் நாயும் அதைப் பார்த்து வாலாட்டி நக்கத் தொடங்கும்," என்று மறுமொழி கூறினான்.

அடுத்த நாள் அந்தச சீமாட்டி கலைக் கூடத்திற்கு வந்தாள். நாய் தன் வாலை ஆட்டிக்கொண்டே, ஓவியத்தை நோக்கி விரைந்து

ஓடியது; அதை மிகவும் ஆவலுடன் நக்கிப் பார்த்தது. சிமாட்டி, "பிரமாதம், ஆஹா! என்ன அழகு! என் நாய்க்கு இந்தப் படம் மிகவும் பிடித்திருக்கிறது. அதனால், எனக்கும் பிடித்திருக்கிறது. இதை எடுத்துச் செல்கிறேன்," என்று கூறினாள். அந்த ஓவியத்தின் விலையாக ஒரு பெரிய **தொகையைக்** கலைஞன் கூற, அந்தச் சீமாட்டி, முழு மனத்துடன் அத்தொகையை அவனிடம் கொடுத்தாள்.

சீமாட்டி சென்றதும், கலைஞன் வாய்விட்டுச் சிரித்தான். ஏனெனில், அவன் ஓவியத்தின் மீது ஈரமான மாமிசத் துண்டினால் தடவி இருந்தான். அந்த மாமிசத்தின் வாசனைதான் நாயை ஈர்த்து ஓவியத்தை நக்கத் தூண்டியது என்பதை அந்தச் சீமாட்டி அறியவில்லை.

**Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q13 கலைஞன் எப்போது சீமாட்டியை அழைத்தான்?

(1) சீமாட்டி ஓய்வாக இருந்தபோது
(2) கலைஞன் ஓய்வாக இருந்தபோது
(3) கலைஞன் பல நாள்கள் உழைத்த பிறகு
(4) கலைஞன் ஓவியத்தைத் தீட்டி முடித்த பிறகு

Q14 சீமாட்டி ஏன் ஓவியத்தை நாயிடம் காட்டினார்?

(1) அவள் நாயின் மேல் கொண்ட பாசத்தால்
(2) ஓவியம் தத்ருபமாக இருக்கிறதா என்று அறிவதற்கு
(3) நாய் ஓவியத்தைப் பார்த்து ரசிக்கும் என்பதால்
(4) நாய் புத்திசாலியா என்பதைச் சோதிப்பதற்காக

**B4 சொற்பொருள்**

**Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

Q18 சீமாட்டி

(1) எஜமானி
(2) பணக்காரி
(3) ஆணவக்காரி
(4) அழகி

Q19 தத்ரூபமாக

(1) படம் போல்
(2) ஓவியம் போல்
(3) நகல் போல்
(4) அசல் போல்

Q20 தொகை

(1) பணம்
(2) பரிசு
(3) பொற்காசு
(4) எண்ணிக்கை

Q15 ஓவியனின் பண்புநலன்கள் யாவை?

(1) உலகியல் அறிவுடன் நன்றாகச் சித்திரம் வரையக்கூடியவன்
(2) பணக்காரர்களின் மனப்போக்கை அறிந்து செய்லபடுபவன்
(3) உலகியல் அறிவும் பணக்காரர்களின் மனப்போக்கையும் அறிந்தவன்
(4) பணக்காரர்களின் போக்கை அறிந்து சித்திரம் வரைபவன்

Q16 மறுநாள் நாய் என்ன செய்தது?

(1) நாய் சீமாட்டியை அடையாளம் கண்டு நக்கியது
(2) நாய் வாலையும் கால்களையும் ஆட்டி ஓவியத்தை நக்கியது
(3) நாய் வாலை ஆட்டிக்கொண்டு சிமாட்டியை நக்கியது
(4) நாய் வாலைக் ஆட்டிக்கொண்டு ஓவியத்தை நக்கியது

Q17 சீமாட்டி ஏன் ஓவியனுக்குப் பெரிய தொகையைக் கொடுத்தாள்?

(1) நாய்க்கு ஓவியம் மிகவும் பிடித்திருந்ததால்
(2) ஓவியன் மீண்டும் ஓவியத்தை வரைந்ததால்
(3) ஓவியம் அழகாகவும் பெரிதாகவும் இருந்ததால்
(4) நாய் ஓவியத்தை அடையாளங்கண்டு கொண்டதால்

**B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

**பின் வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:**

**இறுதியாண்டு தேர்வு எழுதும் மாணவர்களுக்கான**

ஆறாம் வகுப்பிற்கான

# சிறப்புப்பட்டறை

**2013**


## பட்டறை நிகழ்வுக்கான விவரங்கள்

| | |
|---|---|
| முதல் பட்டறை | - ஏப்ரல் 8-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை |
| இரண்டாம் பட்டறை | - ஜூன் 2 -ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை |
| மூன்றாம் பட்டறைற | - ஜூலை 10-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரை |



**கட்டணம் - $150**

மதிய உணவு மற்றும் காலை மாலை சிற்றுண்டிகள் வழங்கப்படும்



மாணவர்கள் பட்டறையில் எதையெல்லாம் எதிர்பார்க்கலாம்:

- தேர்வில் கேள்விகளை அணுகும் முறை
- விடைகளை யூகித்து அறிய உதவும் உத்திகள் ஆகியவை கற்பிக்கப்படும்

ஜூன் மாத விடுமுறையில் நடைபெறும் பட்டறைக்குப் பதிவு செய்யும் மாணவர்களுக்குக் **கட்டணத்தில் 10% கழிவு வழங்கப்படும்**



**மேல் விவரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்**

**ஜூரோங் சமூக மன்ற இந்திய நற்பணிக் குழு**



**தொலைபேசி எண்** 62667351

☺ ☻ ☺ ☻ ☺ ☻ ☺ ☻ ☺ ☻ ☺ ☻

**Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

21 $150 கட்டணம் எவற்றை உள்ளடக்கியதாய் இருக்கும்?

(1) பட்டறைக்கான கட்டணமும் காலை, மாலை உணவும்
(2) பட்டறைக்கான கட்டணமும் காலை உணவும்
(3) பட்டறைக்கான கட்டணமும் மதிய உணவும்
(4) பட்டறைக்கான கட்டணமும் சிற்றுண்டியுடன் மதிய உணவும்

22. பட்டறை யாருக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

(1) சிறுவர்களுக்காக
(2) பள்ளி மாணவர்களுக்காக
(3) தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்களுக்காக
(4) தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களுக்காக

23. பட்டறையின் நோக்கம் என்ன?

(1) தேர்வைச் சரியான முறையில் அணுகுவது
(2) தேர்வைச் சரியான முறையில் கற்பது
(3) மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்வது
(4) மாணவர்களைத் தேர்வில் வெற்றி பெற செய்வது

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q24 ஆசிரியர் மாணவர்களுக்குக் கணக்குப் பயிற்சி கொடுத்தார். மாணவர்கள் பத்திலிருந்து நான்கை ______________. Q24 (   )

Q25 எங்கள் பள்ளிக்குக் காவலர்கள் வருகை புரிந்தார்கள். அவர்கள் போதைப் புழக்கத்திற்கு ஆளாகாமல் இருப்பதைப்பற்றி ஓர் ______________ ஆற்றினார்கள். Q25 (   )

Q26 வாழைத்தோட்டத்தில் பல தொழிலாளிகள் வேலை செய்தார்கள். அவர்கள் ஆடைகளில் வாழை ______________ படிந்திருந்தது. Q26 (   )

Q27 வீடுகள் தீப்பற்றி எறிந்தன. குடிமைத் தற்காப்புப் படையினர் தீயை ______________ மக்களைக் காப்பாற்றினார்கள். Q27 (   )

Q28 அந்த அறையின் ______________ பழுதடைந்து இருந்தது. அதனால் அறை முழுவதும் இருட்டாக இருந்தது. Q28 (   )

| | |
|---|---|
| (1) உறை | (2) கறை |
| (3) அணைத்து | (4) உரை |
| (5) விளக்கு | (6) களித்தனர் |
| (7) கரை | (8) விலக்கு |
| (9) கழித்தனர் | (10) அனைத்து |

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஒருநாள், மன்னர் நெடுஞ்சேரலாதன் தமது அரச சபையில் அமர்ந்திருந்தார். மகன்கள் இருவரும் வழக்கம் போல அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தனர். அவ்வேளையில் (Q29)_______ ஒருவர் அரசரைக் காண அரசவைக்கு வந்தார். | Q29(   ) |
| அரசர் அவரை _____(Q30)_____ அமரச் செய்தார். வந்தவர் முதலில் அரசருக்குத் தம் வணக்கத்தைத் தெரிவித்தார். அதன் பின்னர், அவர் இளவரசர்களாகிய செங்குட்டுவனையும் இளங்கோவையும் ___(Q31)___ பார்த்தார். சற்று யோசித்த பிறகு, அரசரை நோக்கி, "வேந்தே, உங்கள் பக்கத்தில் வீற்றிருக்கும் உம் மக்கள் இருவருள் இளையவரே உமக்குப் பின், _____(Q32)_____ வருவதற்கு உரியவர் ஆவார். அவருக்குத்தான் மன்னர் ஆவதற்குரிய தகுதிகள் உள்ளன," என்று கூறினார். இச்செய்தியைக் கேட்ட மூத்த மகன் செங்குட்டுவனின் ____(Q33)____ வாடியது. | Q30(   )<br>Q31(   )<br>Q32(   )<br>Q33(   ) |
| இதனைப் பக்கத்திலிருந்த இளங்கோ பார்த்தான். உடனே, அவன் தன் இருக்கையை விட்டு எழுந்து நின்றான். சோதிடரைச் சினத்தோடு நோக்கி, "சோதிடரே! மூத்தவன் இருக்கும் போது _____(Q34)_____ ஆட்சிக்கு வருவது என்ன நியாயம்? என் அண்ணன் இருக்க நான் அரசுக்கு உரியவன் ஆவதா? இது ஒரு நாளும் _____(Q35)_____! உமது கருத்தைப் பொய்யாக்கும் பொருட்டு நான் இப்போதே துறவியாகின்றேன்," என்று அழுத்தமாகச் சொன்னான். அக்கணமே காவியுடை தரித்து அரண்மனையைவிட்டு வெளியேறினான் இளையவன். | Q34(   )<br>Q35(   ) |

| | | |
|---|---|---|
| (1) ஆட்சிக்கு | (2) மன்னர் | (3) முகம் |
| (4) பெரியவன் | (5) வரவேற்று | (6) ஆதரித்து |
| (7) உற்று | (8) நடக்காது | (9) சோதிடர் |
| (10) இளையவன் | (11) எண்ணம் | (12) முடியாது |

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

சிங்கப்பூரின் மண்டாய் பகுதியில் உள்ள 'லோரோங் சம்பா'வில் (Lorong Samba) ஒரு சிறு பண்ணைக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் தம்முடைய பண்ணையில் சில ஆடுகளையும் மாடுகளையும் வளர்த்து வந்தார். அவற்றுடன் பழ மரங்களையும் காய்கறிச் செடிகளையும் பயிரிட்டு வளர்த்து வந்தார்.

பண்ணைக்காரரின் மூத்த மகன் பெயர் இலட்சுமணன். அவன் தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் தன் தந்தையாரின் ஆடு மாடுகளைக் கவனித்துக் கொள்வான். இலட்சுமணன் தொடக்கப் பள்ளியில் படிக்கிறான். பள்ளிப் பாடங்களைப் படித்து முடித்த பிறகு, பண்ணையிலுள்ள ஆடு மாடுகளுக்கு வேண்டிய தீனியைப் போட்டு அவற்றைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வான்.

ஒரு நாள் காலையில் இலட்சுமணன் தன் தம்பியை அழைத்துக் கொண்டு, மேயச் சென்ற ஆடுகளித் தேடிச் சென்றான். மரஞ்செடி கொடிகள் அடர்ந்த அப்பகுதியில் அவனால் தன் ஆடுகளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறிது தூரம் சென்றதும், புதர்கள் அடர்ந்த பகுதியிலிருந்து 'சர சர' வென்று சத்தம் கேட்டது. இலட்சுமணனும் அவனுடைய தம்பியும் சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தனர். 'ஒரு வேளை பாம்பாக இருந்தாலும் இருக்கும்' என்று இலட்டுமணன் நினைத்தான். எனவே சத்தம் வந்த திசையைக் கூர்ந்து கவனித்தான். என்ன ஆச்சர்யம்! அங்குப் பாம்பு இல்லை. ஆனால், ஒரு பெரிய குரங்கு அவனை 'உர்' என்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. மேலும், அது தன் பல்லைக் காட்டிப் பல பாவனைகளைச் செய்தது. இலட்சுமணனும் அவனுடைய தம்பியும் அக்குரங்கை அச்சத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர். குரங்கு அவர்களைப் பார்த்து முறைக்க ஆரம்பித்தது. இருவரும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவ்விடத்தை விட்டு ஓடத் தொடங்கினர். திடீரென்று அக்குரங்கு மரத்திலிருந்து பாய்ந்து இலட்சுமணனின் தலையில் உட்கார்ந்தது. இதைக் கண்ட இலட்சுமணனின் தம்பி பயந்து அலறிக் கொண்டு ஓடினான்.

இலட்சுமணனின் தம்பி, தொழுவத்தில் பால் கறந்து கொண்டிருந்த தன் தந்தையிடம் நடந்ததைக் கூறினான். அவர் பதறிப் போய், ஒரு கோலை எடுத்துக் கொண்டு சம்பவம் நடந்த இடத்தை நோக்கி ஓடினார். அங்கே தன் மகன் குரங்குடன் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர் தன் கையில் இருந்த கோலால் அப்பொல்லாத குஅங்கை அடித்து விரட்டினார். அக்குரங்கு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அருகிலிருந்த மரத்தில் மீது ஏறிக் கொண்டது. குரங்கின் பிடியிலிருந்து தப்பிய இலட்சுமணன் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தான்.

அவனின் தந்தை அவனைத் தூக்கிக் கொண்டு ஈசூன் வட்டாரத்தில் உள்ள மருந்தகத்திற்குச் சென்றார். அங்கிருந்த மருத்துவரின் ஆலோசனைப்படி அவர் பையனைத் 'தோ பாயோ' (Toa Payoh) மருத்துவமனிஅயில் கொண்டு போய்ச் சேர்த்தார். இலட்சுமணனுக்குச் சுமார் ஆறு செண்டி மீட்டர் நீளத்திற்குக் கையில் ஒரு காயம் ஏற்பட்டிருந்தது. எனவே, மருத்துவர்கள் அவனை மருத்துவமனையில் தங்க வைத்து சிகிச்சை அளித்தார்கள்.

நடந்ததைக் கேள்வியுற்ற இலட்சுமனனின் ஆசிரியரும் வகுப்பு மாணவர்களும் அவனைப் பார்க்க மருத்துவமனைக்குச் சென்றனர். தாங்கள் கொண்டு வந்திருந்த பழங்களையும் பூக்கூடையையும் அவனுக்குக் கொடுத்து, அன்போடு பேசி ஆறுதல் கூறினர். இலட்சுமணன் அவர்களுக்கு நன்றி கூறினான்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

Q36. 'லோரோங் சம்பா'வில் வாழ்ந்த பண்ணைக்காரர் தம் பண்ணையில் எவற்றை வளர்த்து வந்தார்? (3)

Q37. இலட்சுமணன் தன் தந்தைக்கு எவ்வாறு உதவி செய்வான்? (3)

Q38. இலட்சுமணனால் ஏன் மேயச் சென்ற ஆடுகளை வீட்டிற்கு ஓட்டி வர முடியவில்லை? (3)

Q39. சிறுவர்கள் இருவரும் ஏன் அவ்விடத்தை விட்டு ஓடத் தொடங்கினர்? (4)

Q40. தன் இளைய மகன் மூலம் செய்தியை அறிந்த தந்தை இலட்சுமணனைக் காப்பாற்ற என்ன செய்தார்? (4)

Q41. இலட்சுமணனை முதலில் பார்த்த மருத்துவர் அவனை ஏன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்? (3)

**P6 SA1**
**TESTPAPER 5**

<u>ஒரு நாள் இரண்டு தவளைகள்.......</u>

1. 3 2. 2 3. 4 4. 2 5. 1 6. 3

7. 4 8. 2 9. 1 10. 3 11. 4 12. 2

13. 4 14. 2 15. 3 16. 4 17. 1

18. 2 19. 4 20. 4

21. 4 22. 3 23. 1

24. 9 25. 4 26. 2 27. 10 28. 5

29. 9 30. 5 31. 7 32. 1 33. 3 34. 10 35. 8

36. 'லோரோங் சம்பா'வில் வாழ்ந்த பண்ணைக்காரர் தம் பண்ணையில் ஆடுகள், மாடுகள், பழ மரங்கள் மற்றும் காய்கறிச் செடிகளையும் வளர்த்து வந்தார்.

37. இலட்சுமணன் தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் தன் தந்தையின் ஆடு மாடுகளை கவனித்துக் கொண்டு தன் பள்ளிப் பாடங்களைப் படித்து முடித்த பிறகு அவற்றுக்கு வேண்டிய தீனியைப் போட்டுக் கண்ணும் கருத்துமாக பார்த்துகொள்வான்.

38. ஆடுகள் மேயச் சென்ற இடம் மரஞ்செடி கொடிகள் அடர்ந்த இடமாக இருந்ததால் அவனால் மேயச் சென்ற ஆடுகளை வீட்டிற்கு ஓட்டி வர முடியவில்லை.

39. ஒரு பெரிய குரங்கு சிறுவர்களை 'உர்' என்று உற்றுப் பார்த்து பல்லைக் காட்டி பல பாவனைகளைச் ச்ய்து அவர்களைப் பார்த்து முறைக்க ஆரம்பித்ததால் சிறுவர்கள் அச்சத்துடன் அவ்விடத்தை விட்டு ஓடத் தொடங்கினர்.

40. தன் இளைய மகன் மூலம் செய்தி அறிந்த தந்தை பதறிப் போய் கையில் ஒரு கோலுடன் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று அங்கு குரங்குடன் போராடிக் கொண்டிருந்த தன் மகனைப் பார்த்ததும் தன் கையிலிருந்த கோலால் அப்பொல்லாத குரங்கை அடித்து விரட்டினார்.

41. இலட்சுமணனின் கையில் ஆறு செண்டி மீட்டர் நீளத்திற்குக் காயம் ஏற்பட்டிருந்ததால் அதனைக் குணப்படுத்தவே அவனை முதலில் பார்த்த மருத்துவர் அவனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.